# திருவள்ளுவரின் தண்டனைக் கொள்கை

ஜெ. நிர்மலாபாய்

முன்னுரை: இரண்டாயிரம் ஆண்டுகட்கு முற்பட்ட திருக்குறள் இன்றைய உலகில் வாழும் எல்லோருக்கும் ஏற்றதாய் அமைந்திருப்பதே திருக்குறளின் சிறப்பு. இது காலங்கடந்து நிற்பதால் இதனைப் பல்வேறு மொழிகளில் வெளிநாட்டாரும் மொழி பெயர்த்துளனர்.

“உலக அறிஞர்களையும் சிந்தனையாளர்களையும் தம் கருத்து வன்மையாலும் சொல்லும் நெறியாலும் ஈர்த்த அறிவுக் கருவூலம் திருக்குறள்”1 என்கிறார் இ.சுந்தரமூர்த்தி அவர்கள். திருக்குறள் கருத்துக்களைச் சான்றோர் தங்கள் படைப்பில் பயன்படுத்தி வருவதே அதன் சிறப்பிற்குச் சான்றாகும். வள்ளுவர் கருத்துக்களை வாழக்கையில் இணைத்தால் நாட்டில் செழிப்பும் அமைதியும் நிலவும்.

“அணுவைத் துளைத் தேழ் கடலைப்புகட்டிக் குறுகத் தறித்த குறள்”

என ஔவையார் புகழ்ந்துள்ளார்.

இக்கட்டுரையில் அறிவியலில் (Ethics) கூறப்படும் தண்டனைக் கொள்கைகள் திருவள்ளுவரின் தண்டனைக் கொள்கைகளோடு பொருத்தி ஆராயப்படுகிறது. அறத்துப்பால் என ஒரு தனிப் பகுதியை அமைத்துள்ளதால் அக்கால கட்டத்தில் அறம் பற்றிய உணர்வு மக்களுக்குத் தேவை என வள்ளுவர் எண்ணினார் என்பதை உய்த்துணரலாம்.

சமூகம் தனக்கென வரையறுத்துக் கொண்ட ஒழுக்க முறைமைகளின் தொகுதியே – முழுநிறை வடிவமே அறம் ஆகும். காலங்காலமாய் ஏற்பட்ட அனுபவத்தால் அறவியல் படிப்படியாக இந்நிலையை எட்டியுள்ளதென்பது ஆர். சாரங்கபாணி அவர்களின் கருத்து. அறச் செயலின் வளர்ச்சி முறைகளை

1. இயல்பூக்க நிலை (Level of Instinct)
2. மரபொழுக்க நிலை (Level of Custom)
3. மனச்சான்று நிலை (Level of Conscience)

என மூன்று படிகளாக அறவியலாளர் பிரித்துக் காட்டுவர்.

**தொல்காப்பியத்தில் தண்டனை:**“பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர்” (1057) என தொல்காப்பியத்தில் வருதலான் முற்காலத்தைவிடப் பிற்காலத்தில் பொய்யும் வழுவும் தோன்றின என்பது தெளிவாகிறது. மேலும் கண்டோர் கூற்றில் செல்லும் காலமும் வழியும் அஞ்சத்தக்கனவாயுள்ள குற்றங்களையும் செய்திகளையும் காட்டல் என வருதலான் (986) அக்காலத்தில் குற்றங்கள் கூறப்பட்டிருப்பினும் தண்டனை முறை கூறப்படவில்லை. பெரியொர் ஒழுக்கம் பெரிது எனச் சொல்லித் தலைவனைத் திருத்தும் இடத்தும் (1096:10-12) என வருதலால் குற்றங்காணின் பெரியோர் திருத்த முற்படுவதையே தொல்காப்பியம் கூறுகிறது. ஆயின் பகைவரை அழித்தல் அரசர்க்கு வீரமாகவே கருதப்பட்டது.

பண்டையத் தமிழ் இலக்கியங்கள் அறத்தினை வலியுறுத்துகின்றதேயன்றி அறம் வழுவினோர்க்குக் கொடுக்க வேண்டிய தண்டனையைப் பற்றி வடமொழி நூல்கள் குறிப்பிடுவது போன்று குறிப்பிடவில்லை என க.த.திருநாவுக்கரசு கூறும் கருத்திற்கேற்ப[5] சங்க இலக்கியங்களும் களவின்போது இற்செறித்தல் போன்று சிறு தண்டனையையே அளிக்கிறது.

**குறளும் குற்றம் தவிர்த்தலும்** "அறம் எதைப் பயக்கின்றதோ அது மட்டுமே இன்பமாகும்"[6] என்கிறார் வள்ளுவர். ஒரு பண்பட்ட மனிதன் எவ்வாறு இருக்க வேண்டும் என்பதைக் குறள் காட்டுகிறது என்கிறார் ஏ.வேலுப்பிள்ளையவர்கள்.[7] குற்றம் தவிர்க்கப்பட வேண்டும் என்பதை இரு உத்திகளைக் கொண்டு வள்ளுவர் வலியுறுத்துகிறார்.

1. குற்றம் இன்றேல் சிறப்பு
2. குற்றம் புரியின் தீமை

எனும் பொருண்மை அமையுமாறு குறள்களை அமைத்துள்ளார்.

**குற்றம் இன்றேல்** குற்றத்தை வரும் முன் காக்க வேண்டும் என்பதே வள்ளுவர் கொள்கை. எனவே,

"வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர்
வைத்தூறு போலக் கெடும்" குறள் (435)

என்கிறார். மகளிர்க்கு நிறைகாக்கும் காப்பே சிறந்தது என்கிறார் (57). குற்றம் செய்யாதிருப்பவர் பெறும் சிறப்புக்களைக் கூறும் வழி குற்றம் செய்யாதிருக்கும் மன நிலையை மக்களுக்கு ஏற்படுத்துகிறார்.

"அடுக்கிய கோடி பெறினும் குடிப்பிறந்தார்
குன்றுவ செய்தல் இலர் குறள் (954)

என்றும், உயர் குடியிற் பிறந்தவர் நல்லொழுக்கம், மெய்மை, நாணம் தவறார் (952) என்றும் பிறன் மனை நோக்காமை பேராண்மை (148), உலகம் பழித்ததை ஒழித்துவிடல் சிறப்பு (280) என்றும். அகந்தை, கோபம், காமம் இன்றேல் வாழ்வியல் பெருக்கம் ஏற்படும் (43) என்றும் கூறுகிறார்.

உள்ளம் தூய்மையானால் புகழ் உண்டாகும் என்கிறார் (456). மேலும் பழிக்கிடமில்லா மக்களைப் பெற்றால் ஏழு பிறப்பிலும் துன்பம் சேராது (62) குற்றம் செய்யாதவன் செல்வம் சந்ததியைச் சேரும் (112),

ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும் (131)

என்கிறார். துன்பம் தரினும் இறுதியில் இன்பம் பயக்கும் வினையைச் செய்யக் கூறுகிறார் (896). பொய் பேசாமை (323) பற்றியும், கொல்லாமை பற்றியும் (321-329) வலியுறுத்துகிறார்.

**ஒழுக்கம் இன்றேல்** தீவினை அச்சம் என ஒரு அதிகாரத்தையே அமைத்திருப்பதால் தீய செயல் புரிய அஞ்சவேண்டும் எனும் அவரது எண்ணம் மிகத் தெளிவாக உள்ளது. உள்ளத்தால் குற்றம் செய்தலே தீது என விவிலியம் கூறுவதை வள்ளுவரும் வற்புறுத்துகிறார் (282). குடிப்பிறப்பு அக்காலத்தில் சிறப்பாகக் கருதப்பட்டதால் ஒழுக்கம் தவறினால் குடிப்பிறப்பு கெடும் என்கிறார் (1019).

"பிறன் பொருளை இச்சாதிருப்பாயாக" எனும் விவிமலிய நூலின் கருத்திற்கேற்ப, பிறன் மனை நோக்குதலே பேராண்மைக்கு இழுக்கு (142, 146); பிறன் பொருள் விரும்பினாலே வறுமை (174) அழிவு ஏற்படும் (150, 180) என்றும் பிறன் பொருளை வஞ்சித்தால் செல்வம் கெடும் (283) என்றும் திருவள்ளுவர் குறிப்பிடுகின்றார்.

சங்க இலக்கியம் “கள் குடித்தல் தீது” எனக் குறிப்பிடவில்லை. ஆனால் வள்ளுவர் “கள்ளுண்ணாமை” என ஒரு அதிகாரத்தையே அமைத்துள்ளார். கள்ளுண்பதால் அவர்கள் நெஞ்சில் மறைந்திருக்கும் குற்றம் வெளியாகி விடுவது (928) மட்டுமின்றி, சான்றோரால் மதிக்கப்பட்டார் (922), நகைப்படுவர் (927) என்று கூறி கள் உண்ணலின் தீமையை வள்ளுவர் விளக்குகிறார்

“சூது பெரிய குற்றமாக எண்ணப்படவில்லை எனினும் அதனை “முகடி” அதாவது “மூதேவி” என்கிறார் வள்ளுவர். அதனால் வயிறு நியை உண்ண முடியாமலும், மேலும் துன்பத்திற்குள்ளாகவும் நேரிடும் என்கிறார் (936). அது மட்டுமின்றி புகழைக் கெடுத்துத் துன்பம், வறுமை தரும் (934), செல்வம், நற்பண்பு கெடுக்கும் (937), புகழ், கல்வி, செல்வம், உணவு, உடை ஆகியன சேராது தடுக்கும் (939) என்றெல்லாம் கூறுகிறார்.

சில குறள்களில் குற்றத்தால் வரும் கேட்டினையும், குற்றமின்மையால் பெறும் நன்மையையும் சேர்த்தே குறிப்பிடுகின்றார். களவினால் உயிர் வாழ்க்கை தவறும், ஒழுக்கத்தால் உயர் பிறப்பு (133) என்று கூறும் வழி, குற்றம் நீங்கி வாழ்வதால் வாழ்வில் சிறப்பு ஏற்படும் என்பதைத் தெளிவுறுத்துகிறார்.

**குற்றமும் தண்டனையும்** அறத்திற்கும். சட்டத்திற்கும் குறிக்கோளாக அமைவது சமுதாய இன்பமேயாகும். திருக்குறள் அறநூலாக இருந்தாலும் சட்டத்தின் சாயலைக் கொண்டிருப்பது அதன் சிறப்பாகும். ஆசையே குற்றங்களுக்குக் காரணம் என புத்தர் கூறுகிறார் நல்லது செய்யாததே குற்றம் என்பது ஷிவ்வேரா எனும் அறிஞரது கருத்து இதனை அன்றே வலியுறுத்தியுள்ளார். மேலும் பிறர் குற்றம் கூறாமையே சால்பு என்கிறார் (984).

குற்றவாளிகளுக்கு அளிக்கப்படும் எதிர் மறைப் பரிசே தண்டையாகும். குற்றவியல் சட்டத்திற்கு (Criminal law) தண்டனையும், அறவியல் சட்டத்திற்கு (Ethical law) கற்பித்தல், பயிற்சி, அறிவுரை போன்றவையும் கருவிகளாக அமைகின்றன.[8] ஒரு செயலின் தவறான தன்மை குற்றவாளிக்குத் தண்டனை அளிப்பதன் மூலம் ஒழுங்கு செய்யப்படுகிறது. எனவே தண்டனை என்பது அறவழியிலான நேர்மைச் செங்கோல்.[9]

குற்றவாளிக்கு விதிக்கப்படும் தண்டனை அவனுக்கு மட்டுமின்றி பிறருக்கும் அச்சம் ஏற்படச் செய்கிறது. தண்டனையின் நோக்கம் உயர்ந்தது, மிகத் தூய்மையானது. அதனை நெறியோடு பயன்படுத்தாவிட்டால் அதுவே பயங்கர விளைவுகளைத் தோற்றுவித்து விடுகிறது என்கிறார் மு. அண்ணாமலை[10].

அறவியல் மூன்று தண்டனைக் கொள்கைகளைக் குறிப்பிடுகிறது.

### 1. எச்சரிக்கை மாதிரி தண்டனைக் கொள்கை : (Deterrent Theory)

குற்றவாளியைத் தணடிப்பதால் பிறர் அது போன்ற குற்றங்களைச் செய்யாதிருக்க வேண்டுமென்பதே இத் தண்டனையின் நோக்கம். இத் தண்டனையை அறக் கடவுள் அளிப்பதாகத் திருவள்ளுவர் குறிப்பிடுகிறார்.

“அரசு அன்று கொல்லும் தெய்வம் நின்று கொல்லும்” எனும் பழமொழிக்கேற்ப பிற்கால இலக்கியமான சிலப்பதிகாரம் “அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும்” என்பது அரசன் தவறு செய்தாலும் அறக்கடவுள் தண்டிக்கும் என்பதைத் தெளிவாகக் காட்டுகிறது.

பிறர்க்குய்இன்னா முற்பகல் செயின் தமக்குஇன்னா

பிற்பகல் தாமே வரும் குறள் (319)

எனும் குறள் வழி பிறர் தண்டிக்காவிடினும் செய்த குற்றத்திற்குக் கடவுள் தண்டனை அளிப்பார் எனும் வள்ளுவர் எண்ணத்தினை உய்த்துணரலாம் இதனையே சிலப்பதிகாரம் “ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும்” என்கிறது. யார் தீயவை செய்தாலும் தீயவை தீமைக்குத் தனி மனிதனோ அரசனோ தண்டனை அளிக்காவிடினும் கடவுள் அளிப்பார் என்பதைக் கோடிட்டுக் காட்டுகிறார்.

மறந்தும் பிறன் கேடு சூழற்க சூழின்
அறஞ்சூழும் சூழ்ந்தவன் கேடு (குறள் 204)

எனும் குறள் வழி பிறர்க்குக் கேடு பயக்கும் வினையை எண்ணினாலே அறக்கடவுள் கெடுதல் செய்யும் - தண்டிக்கும் என்கிறார். அழுக்காறு நரகத்தில் தள்ளிவிடும் (168) என்பதும் கடவுள் அளிக்கும் தண்டனையோயாகும். இவ்வாறு கடவுள் தண்டிப்பார் எனும் அச்ச உணர்வு மக்களை எச்சரித்துக் குற்றம் செய்யாமலிருக்கும்படிச் செய்கிறது.

**2. சீர்திருத்தக் கொள்கை : (Reformative Theory)** இக் கொள்கை குற்றவாளியைச் சீர்திருத்தும் நோக்கில் அமைந்தது. தனி மனிதன் தனக்கு இன்னா செய்தாரை இவ்வகையாகத் தண்டிக்க வேண்டும் என்கிறார்.

இன்னாசெய் தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயம் செய்து விடல் (குறள் 314)

என்பதே தனிமனிதனைப் பொறுத்தவரை வள்ளுவரது தண்டனைக் கொள்கையாகும். இதனை வலியுறுத்த “இன்னா செய்தார்க்கும் இனியவே செய்யாக்கால்” (987) என்றும், “ஒறுத்தாரினும் பொறுத்தாரே சிறந்தவர்” (152, 155, 156) என்றும் கூறுகிறார். “உன்னைப்போல் பிறனை நேசி” என்று விவிலியம் கூறுவது போல்

தன்னுயிர்க்கும் இன்னாமை தானறிவான் என்கொலோ
மன்னுயிர்க்கு இன்னா செயல் (குறள் 318)

என்கிறார். மேலும் தனக்குத் துன்பம் செய்தவர்க்குத் தான் எதிர்த் துன்பம் செய்தால் அது பிழைத்தற்கரிய துன்பத்தைக் கொடுக்கும் (313) என்கிறார்.

கறுத்து இன்னா செய்தவக் கண்ணும் மறுத்து இன்னா
செய்யாமை மாசற்றார் கோள் (குறள் 312)

எனும் குறள் ஒருவன் பகைகொண்டு துன்பம் செய்தவிடத்தும் அவனுக்குத் துன்பம் செய்யாமையே குற்றமற்றவர் கொள்கை என்கிறது. அதாவது குற்றமற்றவன் தன்னைத் துன்புறுத்தியவனுக்கு எதிர்த்துன்பம் செய்யாதிருக்கவேண்டும் என்பதே வள்ளுவர் கொள்கை. பாதிக்கப்பட்டவன் குற்றவாளியாக இருந்தால் அவன் எதிரிக்குத் துன்பம் விளைவிக்க முயல்வது இயல்பு.

1. <u>பழிக்குப்பழி வாங்கும் தண்டனைக் கொள்கை (**Retributive Theory**)</u>
குற்றவாளி பிறர்க்கு அளித்த துன்பத்தை அக் குற்றவாளி அனுபவிக்குமாறு செய்தலே இத் தண்டனையின் நோக்கமாகும். இத் தண்டனையை அரசன் அளிப்பதாகக் குறள் காட்டுகிறது. அறநூலில் இத்தண்டனையை வலிய அமைப்பு, இளகிக் கொடுக்கும் மெல்லியல்பு என இரண்டு வடிவங்களைப் பெறுகிறது. பொது மனித அறத்திற்காக இத் தண்டனையை அரசன் அளிக்கிறான்.

1. வலிய அமைப்பு வலிய அமைப்புப் பகுதி எத்தகைய புறனடைகளும் விதிக்காமல் மரண தண்டனையை வலிமைப்படுத்த வற்புறுத்தியது.

கொலையிற் கொடியாரை வேந்தொறுத்தல் பைங்கூழ்
களைகட் டதனொடு நேர். (குறள் 550)

எனும் குறள் அரசன் கொடியவரைக் கொலை செய்தவன் மூலம் தண்டித்து நல்லோரைக் காத்தல் உழவன் பயிர்க்குக் களையெடுத்தல் போலாம். களையைப் பின்னர் எரித்துவிடுதல் மரபு. கொடியவன் உயிருடன் இருந்தால் மேலும் கொலைத் தொழிலில் ஈடுபட்டு மக்களுக்கு ஊறு விளைவிக்கலாம் எனும் சூழலில் அவனுக்குக் கொலைத் தண்டனையை திருவள்ளுவர் கூறியிருக்கலாம்.

கொடியவர்களைக் கொலை செய்ய வேண்டும் என்று கூறுவது வள்ளுவர் கருணையற்றவரோ என எண்ணத் தோன்றும். கொலைஞனை ஒறுக்காது விடுதல் கருணையாகது என கா. மீனாட்சி சுந்தரம் அவர்கள் கூறுகிறார்.[11] இவ்வகைத் தண்டனை முறையை வள்ளுவர் குறிப்பிடவில்லை என்று ஆர். சாரங்கபாணி என்பவர் கூறுவது ஏற்புடையதன்று.[12] வலிய அமைப்பினை அவர் வற்புறுத்தவில்லை. அறத்துப்பாலில் கொல்லாமை போற்றும் வள்ளுவர், பொருட்பாலில் அதனைத் துறந்தார் எனக் கொள்ளுதல் முடியாது எனும் தி.முருகரத்தினம்.[18]கூறும் கருத்து ஏற்புடையதே.

**2. இளகிக்கொடுக்கும் மெல்லியல்பு:** இளகிக் கொடுக்கும் மெல்லியல்பு கொலை நடந்தபோது அமைந்த சூழ்நிலை, செய்தவனுடைய வயது, அறிவு, முதிர்ச்சி முதலியவைகளைக் கருத்திற்கொள்ள வேண்டும் என்று பரிந்துரை செய்தது. தண்டனை அளிக்கும் அரசன் குற்றத்தினின்று நீங்கி, தண்டிப்பதற்குரிய, குற்றத்தைப்பற்றி நன்கு அறிந்து கடமையுணர்வோடு தண்டிக்க வேண்டுமென வள்ளுவர் குறிப்பிடுகிறார்.

1. அரசன் தகுதி: குற்றத்தின் நீங்கி நன்னெறியில் ஒழுக வேண்டும் என்று எண்ணுகின்ற காவலன் குற்றங்கள் இன்னவென்பதை முதற்கண் அறிய வேண்டும். பின்னர், அவை தன்பால் நிகழாமல் காத்துக் கொள்ள வேண்டும். “தன் குற்றம் நீக்கிப் பிறர் குற்றம் காண்கின் (436) எனும் குறளில் அரசன் குற்றங்களிலிருந்து விடுபட்டே பிறர் குற்றம் காண வேண்டும் என்கிறார் வள்ளுவர்.

குடிமக்களைக் காப்பதே குறிக்கோளாதலின் தண்டித்து அடக்க வேண்டியாரிடத்தும் இரக்கம் காட்டி அக் குற்றத்தைப் பொறுக்கும் தன்மையே அரசர்க்கு முதன்மையான நற்குணமாகும் (579). அரசன் நீதி முறை செய்து காப்பாற்றுபவனாகவும் (388) இயல்புளிக் கோலோச்சுபவனாகவும் (545) இருக்க வேண்டும். உலோபம், மாட்சியில்லாத மனம், தகுதியற்ற மகிழ்ச்சி ஆகியன அரசனுக்குக் குற்றம் எனக் கூறுகிறார் (432). வள்ளுவர் கண்ட “அரசனின் பண்புகளை” தி. முருகரத்தினம் அவர்கள் விரிவாகத் நூலில் விளக்கியுள்ளார்.[15]

2. அரசன் கடமை கொடையும் செங்கோல் முறையும் குடிகளைக் காத்தலும் அரசனது கடமையாகும். (390)

குடிபுறங் காத்தோம்பிக் குற்றம் கடிதல்
வடுவன்று வேந்தன் தொழில் (குறள் 594)

எனும் குறளில் பிறர் மட்டுமின்றித் தானும் குடிகளை வருத்தாமல் காத்து அவர்களது குற்றங்களைத் தண்டனையின் மூலம் நீக்குதல் அரசனது கடமையாகும்: அது அவனுக்குப் பிழையன்று என்பதை உணரச் செய்கிறார். மேலும்,

முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறையென்று வைக்கப் படும் (388)

என்கிறார். நீதி வேண்டியோர் எளிதாகப் பார்த்துப் பேசத்தக்க நிலையில் உள்ளவராகி அவர் சொல்லியவற்றை ஆராய்ந்து நீதி செய்ய வேண்டுமென வள்ளுவர் குறிப்பிடுகின்றார், (548). எனவே குற்றம் புரிந்தவனது நிலைமையும் ஆராய வேண்டுமென்பதை வள்ளுவர் சுட்டிச் செல்கிறார்.

3. தண்டிக்கும் முறை: சமன்செய்து சீர்தூக்குங் கோல்போல் அமைந்தொருபால்
கோடாமை சான்றோர்க் கணி (குறள் 118)

எனும் குறள் கருத்தே இன்றும் நடுநிலையின்று தவறாமல் வழங்கப்படும் தண்டனை முறைக்குக் காட்டாகப் பயன்படுகிறது.

ஓர்ந்துகண் ணோடாது இறைபுரிந்து யார்மட்டும்
தேர்ந்துசெய் வ.'.தே முறை (குறள் 541)

எனும் குறள், குற்றங்களை ஆராய்ந்து, எவரிடத்தும் தாட்சணியமின்றி நடுவு நிலைமையோடு ஆராய்ந்து குற்றத்திற்குத் தக்க தண்டனையை அறிந்து செய்வதே முறையாகும் எனும் வள்ளுவர் கருத்தினைத் தெளிவாகக் கூறுகிறது.

தக்காங்கு நாடித் தலைசொல்லா வண்ணத்தால்
ஒத்தாங்கு ஒறுப்பது வேந்து (குறள் 561)

எனும் குறளில் குற்றத்தைத் தக்க முறையில் ஆராய்ந்து அவன் மேலும் குற்றம் செய்யாதபடி, குற்றத்துக்குத் தக்கவாறு, அதாவது குற்றத்தின் அளவிற்கு மேற்படாமல் தண்டித்தலே அரசன் செய்யத்தக்காது என்கிறார். இங்கு, குற்றம் இழைக்கப்பட்ட சூழலையும் ஆராய வேண்டும் என்பதை உய்த்துணரச் செய்கிறார். குற்றம் செய்யாதபடி தண்டித்தாலும், "கடிதோச்சி மெல்ல எறிக" என்கிறார். அரசன் அளவுகடந்து தண்டிப்பது (562) போலக் காட்டி அளவாக தண்டிக்க வேண்டுமென்பதே வள்ளுவர் தண்டனைக் கொள்கையாகும்.

குற்றவாளி திருந்த வேண்டுமென்பதே அவரது எண்ணம் ஆயின் பகைவரை அழித்துத் தண்டித்தல் தவறாகக் கருதப்படவில்லை. "பாவம் செய்த மனிதர்கள் அரசனால் தண்டிக்கப்பட்டால் தன் பாபங்களை நீக்கிப் பெரியோர்கள் போல் சுவர்க்கத்தையடைகிறார்கள்"[16] எனும் மனு தர்மக் கொள்கையை வள்ளுவர் ஏற்றதாகத் தெரியவில்லை. தர்ம சாஸ்திரங்களில் கூறப்படும் சாதி அடிப்படைத் தண்டனை முறையையும் வள்ளுவர் குறிப்பிடவில்லை.[17] "பக்கத்து நாட்டவன் பகைவன், பகைவனுக்கு பகைவன் நண்பன்" என்ற மண்டலக் கோட்பாடு வள்ளுவர்க்கு உடன்பாடில்லை"[18] என்பது தி.முருகரத்தினம் அவர்களின் கருத்து.

**முடிவுரை**

1. தொல்காப்பியமும், சங்க இலக்கியங்களும் குற்றவாளியைத் திருத்த முற்படுகின்றன. அதுபோலவே குற்றத்திற்குத் தண்டனை அளிப்பதைவிடக் குற்றம் தவிர்க்கப்பட வேண்டுமென்பதே திருக்குறளில் வலியுறுத்தப்படுகிறது. எனவே சிறந்த குடிமகனாக அமைதற்குரிய தகுதிகள் எடுத்துக் கூறப்படுகிறது.

2. குற்றம் புரியாமல் இருப்பவர்க்கு அளிக்கப்பெறும் நன்மைகளைக் கூறும்வழி, குற்றம் புரிபவர்க்கு ஏற்படும் தீமைகளும் சுட்டப்படுகிறது.

3. தண்டனை அளிப்பவர்களாகக் கடவுள், தனிமனிதன், அரசன் ஆகிய மூவர் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

4. அறவியல் கூறும் எச்சரிக்கை "மாதிரி" தண்டனையை அறக்கடவுள் அளிப்பதாகக் குறிப்பிடும் வழி மக்களை எச்சரிக்க வேண்டுமென்பதே திருவள்ளுவர் கொள்கை.

5. தனக்கு இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண நன்னயம் செய்தல் என்பதே தனிமனிதனைப் பற்றிய வள்ளுவரது தண்டனைக் கொள்கை.

6. மக்களுக்கு ஊறு ஏற்படாமல் காக்கும் பொருட்டு, பழிக்குப் பழி வாங்கும் தண்டனையை அரசன் மட்டுமே மேற்கொள்ளலாம். இத்தண்டனைக் கொள்கையில் வலிய அமைப்பை விட இளகிய அமைப்பே

வற்புறுத்தப்படுகிறது. குற்றவாளியை தண்டித்தலும் பகைவரை அழித்தலும் அரசனது கடமையாகக் கருதப்படுகிறது.

7. அரசன் தவறு செய்தவரைத் தண்டிக்கும் முன் தன்னைத் தகுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். தன் குற்றம் நீக்கிப் பிறர் குற்றம் காண வேண்டும்.

8. ஓர்ந்து கண்ணோடது, தக்காங்கு நாடித் தலைச் செல்லாவண்ணம் ஒறுத்தல், கடிதோச்சி மெல்ல எறிதல் ஆகிய முறைகளை மேற்கொண்டு அரசன் தண்டனை அளிக்க வேண்டும் என்பதே அரசன் அளிக்க வேண்டிய தண்டனை பற்றிய வள்ளுவரது கொள்கையாகும்.

9. முதல் தண்டனைக் கொள்கைப்படி கடவுளும், இரண்டாம் தண்டனைக் கொள்கைப்படி தனிமனிதனும், மூன்றாம் தண்டனைக் கொள்கைப்படி அரசனும் தண்டிப்பதாகத் திருவள்ளுவரின் தண்டனைக் கொள்கைகள் அமைந்துள்ளன.

10. தண்டனை எவ்வாறு அமைய வேண்டும் என்று கூறினாரேயன்றி அக்கால கட்டத்தில் அமைந்த தண்டனை முறையைக் கூறவில்லை. தர்ம சாஸ்தித்திரங்களில் கூறப்படும் தண்டனைக் கொள்கையினின்று திருவள்ளுவரின் தண்டனைனக் கொள்கை மாறுபடுகிறது.

**அடிக்குறிப்புகள்**

1. இ. சுந்தரமூர்த்தி, "திருவள்ளுவர் காட்டும் ஆட்சித் திறன்", வள்ளுவர் காட்டும் வாழ்வியல் நெறி, தி. அம்பிகாபதி, பெ. கோவிந்தாசாமி (தொகுப்பு) ஸ்ரீராமின் இலக்கியக் கடிதம், செ-2, செப் 1996 ப 1.

2. ஜே. நிர்மலா பாய், "நாட்டுப்புற இயலில், அறவியல் (Ethics) குற்றமும் தண்டனையும், புலமை, தொ. 16,டிசம்பர் 1990 ப-39

3. R. Sarangapani, A Critical Study of Ethical Literature in Tamil, I.Ed. 1982, P – 13

4. வை. இரத்தின சபாபதி, அறஇயல், தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம், சென்னை, முதற்பதிப்பு, 1981, ப-27

5. க.த. திருநாவுக்கரசு, திருக்குறள் நீதி இலக்கியம், சென்னைப் பல்கலைக் கழகம், செநன்னை மறுபதிப்பு 1977. ப-5

6. மா. சண்முக சுப்ரமணியம். குறள் கூறும் சட்டநெறி கழக வெளியீடு, சென்னை, முதற்பதிப்பு, டிசம்பர் 1967 ப-9.

7. A. Veluppillai, Epigraphical Evidence for Tamil Studies, I.I.T.S., Adyar, Chennai – 20.

8. Patraick Delvin, The Enforcement of Morals, Oxford University Press, Oxford, 6th Print, 1928. P-23

9. வை. இரத்தின சபாபதி, மேற்படி, ப-381

10. மு. அண்ணாமலை, வள்ளுவர் தனித்தன்மை; மணிவாசகர் நூலகம், சென்னை – 1 ஜனவரி, 1979, ப-14

11. க. மீனாட்சி சுந்தம், “வள்ளுவர் வழி”, ப.முருகன் (தொ. ஆ)., வள்ளுவம் பன்னோர்க்குப் பார்வை ப-14

12. R. Sarangapani, மேற்படி ப-267

13. தி. முருகரத்தினம், குறள் கூறும் இறைமாட்சி, மதுரைப் பல்கலைக் கழகம், மதுரை 1974, ப-79

14. கு. மதுரை முதலியார், திருவள்ளுவர் அரசு, பழனியப்பா பிரதர்ஸ், சென்னை-14, 2-ஆம் பதிப்பு 1970, ப-49.

15. தி. முருகரத்தினம், குறள் கூறும் இறைமாட்சி. மேற்படி ப-80

16. இ. இராமாநுஜா சாரியார் (மொ.பெ). மநு தர்ம சாஸ்திரம், ஸ்ரீ பாரதி அச்சுக் கூடம், சூளை, சென்னை, 1929, ப.222.

17. மேற்படி, பக்,216 – 217

18. தி. முருகரத்தினம், குறள் நெறி, என்னென் பப்ளிக்கேஷன்ஸ், மதுரை -19, முதற்பதிப்பு, டிசம்பர் 1988, ப-68.